JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 207/2017 |
| | : | Prosecution P.W -3 |
| NAME | : | பார்வதி |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 22.01.2026.

**முதல் விசாரணை**

**நான் தற்போது குமந்தாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எதிரி பாப்பாத்தியை எனக்கு தெரியும். என் பக்கத்து வீட்டுக்காரர். அசா.1 முத்தாத்தாள், அசா.2 வெள்ளத்துரை ஆகியோர்களை தெரியும். சாட்சி மரகதமணி என்பவரை தெரியும். தேதி, மாதம் நினைவில் இல்லை. கடந்த 10 வருடங்களுக்கு முன்பு என் அக்கா அசா.1 பாப்பாத்தியும் சண்டை போட்டுக்கொண்டார்கள். நான் தற்செயலாக கிழக்கே சென்ற போது என் அக்கா எதிரி அடித்துவிட்டதாக கூறினார். உடனே நான் என் அக்காவை கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். எதற்காக சண்டை போட்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**அசா.1 எனக்கு அக்கா, அசா.2 எனக்கு அத்தான். இந்த வழக்கு சம்பந்தமாக போலிஸ் என்னை விசாரிக்கவில்லை. சம்பவத்தை**

பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சம்பவத்தை பற்றி மறுநாள் தான் கேள்விபட்டேனா என்றால் ஆமாம். அசா.1 ஐ மருமகன் ஜெயபால் மீது பாப்பாத்தி மகளிடம் தவறாக நடந்ததாக வழக்கு பதிவு செய்யபட்டுள்ளது என்றால் தெரியாது. அசா.1ன் வீடு காளியம்மன் கோவில் தெருவில் உள்ளது என்றால் சரிதான். எங்கள் வீடு வடக்கு தெருவில் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சம்பந்தமாகயார் தகவல் சொன்னார்கள் என்றால் தற்செயலாக போனேன். கூலி வேலை செய்கிறேன். பொதுவாக எங்கள் ஊரில் கூலி வேலைக்கு சென்றால் வீட்டுக்கு வர மாலை 6மணி ஆகும் என்றால் சரிதான். மரகதமணி எனக்கு உறவினர். என்னை நீதிமன்றத்திற்கு அசா.1, அசா.2 தான் அழைத்து வந்தார்கள். நான் அசா.1ன் உறவினர் என்பதால் அவர்கள் அழைத்து வந்ததின் பேரில் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 207/2017 |
| | : | Prosecution P.W -2 |
| NAME | : | வெள்ளத்துரை |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 22.01.2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது குமந்தாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எதிரி பாப்பாத்தியை எனக்கு தெரியும். என் பக்கத்து வீட்டுக்காரர். அசா.1 முத்தாத்தாள் என் மனைவி. சாட்சிகள் மரகதமணி, பார்வதி ஆகியோர்களை தெரியும். தேதி, மாதம் நினைவில் இல்லை. கடந்த 10 வருடங்களுக்கு முன்பு மாலை 5,5.30 மணியளவில் எங்கள் வீட்டிற்கு முன்பு உள்ள தெருவில் நாங்கள் வீடு கட்டி கொண்டிருந்ததால் மணலை போட்டிருந்தோம். கொத்தனார் வேலை செய்துக்கொண்டிருந்த போது நான் சாந்து குலைத்துக்கொண்டிருந்தேன். என் மனைவி மணல் சலித்துக்கொண்டிருந்தார். எதிரி மணலில் மிதித்துவிட்டு போனபோது எதிரிக்கும் என் மனைவிக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. எதிரி என் மனைவியை சல்லிடையின் மேல் தள்ளி விட்டுவிட்டார். அதில் என் மனைவிக்கு தலை மற்றும் வலது கை புஜத்தில் அடிப்பட்டது. பின்னர் நாங்கள் விலக்கி விட்டோம். பின்னர் கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் புகார்தாரர் என் மனைவி என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தது போன்று தான் போலிசாரிடமும் சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக சம்பவ சமயத்தில் விசாரித்ததை தவிர அதன் பின் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். பாப்பாத்தி மீது வழக்கு பதிவு செய்யப்பட்ட அதே நாளில் நாங்கள் 7 பேர் பாப்பாத்தியை அடித்ததாக வழக்கு பதிவு செய்யபட்டுள்ளது என்றால் சரிதான். ஜெயபால் என் மருமகன் என்றால் சரிதான். ஜெயபால் மற்றும் சுப்பிரமணியன் மீது பாப்பாத்தியின் ஊனமுற்ற மகளிடம் தவறாக நடந்ததாக குற்ற எண் 352/2015 வழக்கு பதிவு செய்யப்ட்டுள்ளது என்றால் தெரியாது. அந்த வழக்கு திருநெல்வேலிநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் தெரியாது. சம்பவ நாளன்று மருத்துவமனையில் போலிசார் விசாரணையில் என் மனைவி சொல்ல சொல்ல போலிசார் எழுதி கொண்டார்கள். ஜெயபால்மீது வழக்கு தாக்கல் செய்ததால் எங்கள் இருவர் குடும்பத்திற்கும் எந்த பேச்சு வார்த்தையும் கிடையாது என்றால் சரியல்ல. பாப்பாத்தியின் கணவர் பெயர் தெரியாது. எனக்கும் பாப்பாத்திக்கும் பேச்சு வார்த்தை கிடையாது என்பதால் தான் அவர் கணவர் பெயர் தெரியவில்லை என்றால் சரியல்ல. எங்கள் ஊரில் உள்ளவர்கள் ஒரே சமுதாயத்த சார்ந்தவர்கள் என்றால் சரிதான். எங்கள் குடும்பத்தில் உள்ளவர்கள் நாட்டாமையாக இருக்கிறார்கள் என்றால் சரியல்ல. மரகதமணி என் சகோதரி. அசா.4 பார்வதி எனக்கு கொழுந்தியா.

சம்பவம் நடந்ததாக சொல்லபடும் நேரத்தில் வீடு கட்டுவதற்கு குழி தோண்டி அஸ்திவாரம் போட்டு கொண்டிருந்தோம்என்றால் சரிதான் சம்பவம் நடந்ததாக சொல்லும் நேரம் 5.30 மணி இருக்கும். நான் கூலி வேலை செய்கிறேன். எங்கள் ஊரில் வேலைக்கு சென்று விட்டு மதியம் 1 மணி 2 மணிக்கு வந்து விடுவார்கள் ஜெயபால் மீது போடபட்ட வழக்கை வாபஸ் வாங்க சொல்லி ஊர்கூட்டம் அடிக்கடி போட்டார்கள் என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தில் சேகர், மரகதமணி, சிரஞ்சீவி, கல்யாணி, ஆகியோர்கள் வீடு உள்ளது என்றால் சரிதான். அவர்கள் எல்லோருக்கும் சம்பவம் நடந்த விபரம் தெரியும் என்றால் சரிதான். பாப்பாத்தி வீட்டிற்கு குறுகிய பாதையில் தான் செல்ல வேண்டும் என்றால் இல்லை. 6 அடி பாதை இருக்கும். பாப்பாத்தி வீட்டிற்கு செல்ல வேண்டும் என்றால் என் மகன் வீட்டைத் தாண்டி தான் செல்ல வேண்டும். அந்த பாதையில்தான் மணல் தட்டி வைத்திருந்தோம் என்றால் ஒரு முக்கில் தட்டி வைத்திருந்தோம். அந்த மணலை மிதித்ததால் தான் பிரச்சினை என முதல் விசாரணையில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். என் மருமகன் மீது போட்ட

வழக்கை வாபஸ் வாங்க சொல்லி அவர்கள் வாபஸ் வாங்காததால் அவர்களை ஊரை விட்டு ஒது க்கி வைத்தோம் என்றாலும் வீடு கட்டுவதற்கு போடபட்டிருந்த கல் இடறி கீழே விழுந்ததில் இருந்த காயத்தை வைத்து எதிரி மீது பொய்யாக இந்த வழக்கு தாக்க்ல் செய்யபட்டுள்ளது என்றாலும் வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. எங்கள் ஊரிலிருந்து காவல்நிலையத்தை தாண்டி தான் மருத்துவமனைக்கு செல்ல முடியும் என்றால் காவல்நிலையம் கொஞ்சம் தள்ளி உள்ளது. எங்கள் ஊரிலிருந்து காவல் நிலையத்திற்கு அரை மணி நேரத்தில் செல்லலாம்.

மறுவிசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 207/2017 |
| | : | Prosecution P.W - 1 |
| NAME | : | முத்தாத்தாள் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 22.01.2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது குமந்தாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எதிரி பாப்பாத்தியை எனக்கு தெரியும். என் பக்கத்து வீட்டுக்காரர். சாட்சிகள் வெள்ளத்துரை, மரகதமணி, பார்வதி ஆகியோர்களை தெரியும். தேதி, மாதம் நினைவில் இல்லை. கடந்த 10 வருடங்களுக்கு முன்பு மாலை 5 மணியளவில் இந்த வழக்கின் எதிரி வீடு இருக்கும் தெருவில் என் மகள் வீடு கட்டுவதற்காக மணல் ஓரமாக போட்டிருந்தேன். மணலை நான் அலசிக்கொண்டிருந்தபோது எதிரி அங்கு வந்துக்கொண்டிருந்தார். அப்போது எதிரி என்னை பார்த்து தெருவில் போட்டு அலசுறியே தேவடியா முண்ட பலவாட்டற என் மருமகனை போட்டு ஏறவா என்று அசிங்கமாக பேசினார். அவ்வாறு எதிரி என்னை அசிங்கமாக பேசியதால் எனக்கு அவமானமாக இருந்தது. எதிரிக்கும் எனக்கும் வாய்தகராறு ஏற்பட்டது. எதிரி என்னை நெஞ்சில் குத்தி கீழே தள்ளி விட்டார். பின்னர் நான் கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். என் தங்கை பார்வதி என்னுடன் வந்தார். நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலீசார் அங்கு

வந்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அதில் இருக்கும் கைரேகை என்னுடையது தான். மேற்படி புகார் வாக்குமூலம் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் நீதிமன்றத்தில் முதல் விசாரணையில் சாட்சியம் அளித்தது போன்று தான் போலிஸ் விசாரணையிலும் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லிய தேதியில் மட்டும் தான் இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் விசாரித்தார் என்றாலும் அதன் பின் விசாரிக்கவில்லை என்றாலும் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் வீடு கட்டி கொண்டிருந்தோம் என்றால் சரிதான். வானம் தோண்டி கல் இரக்கி கொண்டு இருந்தோம் என்றால் சரிதான். அன்றையதேதியில் 10,15 பேர் வேலை பார்த்திருப்பார்களா என்றால் அன்று வேலை கிடையாது. மணல் தான் அரித்து கொண்டிருந்தோம். அந்த இடத்தில் எதிரியும் நானும் தான் இருந்தோம். வேறு யாரும் கிடையாது. வீடு கட்டுவதற்கான மணல் ரோட்டில் போட்டிருந்தோம் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் மாலை 5 மணி இருக்கும். 5 மணி என்றால் இருட்டக்கூடிய நேரம் என்றால் சரிதான். எதிரி பாப்பாத்தி வீட்டிற்கு செல்வதற்கு 4 அடி பாதை சிறிய பாதை தான் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் சாட்சி வெள்ளத்துரை எனது கணவர் என்றால் சரிதான். மரகதமணி என் சம்மந்தி, பார்வதி என் தங்கை.

சம்பவ இடத்தை சுற்றி இருப்பவர்கள் என் உறவினர் என்றால் சரிதான். என் மருமகன் பெயர் ஜெயபால். இந்த சம்பவத்திற்கு முன்பு என் மருமகன் ஜெயபால் பாப்பாத்தி மகளிடம் தவறாக நடந்ததாக வழக்கு உள்ளது என்றால் தெரியாது. குற்ற எண் 352/2015 தான் அந்த வழக்கு என்றாலும் ஜெயபால், சுப்பிரமணியன் அதில் எதிரியாக உள்ளார்கள் என்றாலும் தெரியாது. திருநெல்வேலி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கு சம்பந்தமாக பேச்சு வார்த்தை அடிக்கடி நடத்தினார்களா என்றால் இல்லை. எதிரி மீது நடவடிக்கை எடுக்க சொல்லி கடையநல்லூர் காவல்நிலையத்தில்புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் கொடுத்த புகார் மனுவின் அடிப்படையில் எதிரி மீது இந்த வழக்கை பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். என் வீட்டிற்கும் கடையநல்லூர் காவல்நிலையத்திற்கும் 2 கி.மீ இருக்கும் என்றால் சரிதான். 10 நிமிடத்தில் கடையநல்லூர் காவல்நிலையம் சென்று விடலாம் என்றால் சரிதான். நான் புகார் கொடுத்த அதே நாளில் பாப்பாத்தியை அடித்ததாக எங்கள் 7 நபர்கள் மீது வழக்கு பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கு இந்த நீதிமன்றத்தில் நிலுவையில்

உள்ளது என்றால் சரிதான். மரகதமணியிடம் சம்பவத்தை பற்றி யார் கூறினார்கள் என தெரியாது என்றால் சரியல்ல, என்னை என் சம்மந்தியும், தங்கச்சியும் தான் ஆட்டோவில் கூட்டி சென்றார்கள். சம்பவ இடத்தை சுற்றி உள்ள நபர்களுக்கு சம்பவம் பற்றி தெரியும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சேகர் வீடு, கல்யாண வீடு, சிரஞ்சீவி வீடு சம்பவ இடத்தில் உள்ளது என்றாலும் சம்பவத்தை பற்றி அவர்களுக்கு தெரியும் என்றாலும் சரிதான். பாப்பாத்தியின் கணவருக்கு வெளியூர் என்றால் தெரியாது. இந்த ஊருக்கு வந்து குடியேறி 9 வருடம் இருக்குமா என்றால் தெரியாது. எங்கள் உறவினர் தான் ஊரில் நாட்டாமையாக இருக்கிறார் என்றால் சரிதான். எங்கள் ஊர் திருவிழாவிற்கு பாப்பாத்தி வரமாட்டார் என்றால் தெரியாது.

குருசாமி வயலுக்கு நான் வேலைக்கு செல்வனோ என்றால் இல்லை, அவரை எனக்கு தெரியாது. தெருவில் கொட்டிய மணலை மிதித்ததால் தான் பிரச்சினை வந்தது என்றால் இல்லை, என்னை அவள் அசிங்கமாக ஏசினாள். ஜெயபால் மீது போடபட்ட வழக்கை வாபஸ் வாங்க பலமுறை சொன்னோம் என்றாலும் அவர்கள் கேட்காததால் வீடு கட்டும் போது நான் இடறி கீழே விழுந்ததை வைத்து எதிரி மீது பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும்இல்லை என்றால் சரியல்ல. ஜெயபால் மீது போடபட்ட வழக்கை வாபஸ் வாங்காததால்ஊரை விட்டு பாப்பாத்தியை ஒதுக்கி வைத்துள்ளோம் என்றால் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi